28th February 1969]

Leaflets prepared by students

*62 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Police have confiscated the leaflets under print at the Madras Marson Press, prepared by the Madras students; and

(b) if so, the reason therefor.

மாணவர்களால் தயாரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாணவர்களால் தயாரித்த துண்டுப் பிரசுரம் சென்னை மார்சன் அச்சகத்தில் அச்சாகிக் கொண்டிருக்கும் பொழுது போலீசார் சென்று பறிமுதல் செய்தனரா?

(இ) ஆமெனில், அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) இந்த அச்சகத்தினர் 1867-ம் ஆண்டு அச்சக புத்தகப் பதிவுச் சட்டத்தின் 3-வது பிரிவின் விதித்துறைகளை மீறியதால், இந்த வெளியீடுகள் கைப்பற்றப்பட்டன.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, அப்படி மாணவர்கள் அச்சடித்த துண்டுப்பிரசுரங்கள் ஏதேனும் சர்க்காரைக் கவிழ்க்கும் நிலையிலோ அல்லது நாட்டின் அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையிலோ புரட்சிப் பிரசுரமாக இருந்ததா? அதனால் அதைத் தடை செய்தார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பிரசுரம் செய்பவர்கள் அதை அச்சடிக்கும் அச்சகத்தின் பெயரை அதில் குறிப்பிடவேண்டும். பெயர் குறிப்பிடாமல் துண்டு அறிக்கை வெளியிடக் கூடாது. அதில் அச்சகத்தின் பெயர் இல்லை. அதைப் போலீசார் கண்டு பிடித்து அச்சடிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களைக் கைப்பற்றினார்கள்.

Swatantra Party Resolution

*63 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. Chief Minister be pleased to state—

(a) whether any request was made to the Tamil Nadu Government during the Swatantra Party convention held at Madras in May and June 1968 to prevent the influence of the Communists from spreading in Tamil Nadu; and

(b) if so, the action taken thereon?

[28th February 1969

சுதந்திரக் கட்சி பேரவைக்கூட்டத் தீர்மானம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில் 1968 மே-ஜூன் மாதங்களில் நடந்த சுதந்திர கட்சி மாநாட்டில் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு தமிழகத்தில் பரவுவதை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) 1968 ஜூன் 1, 2 தேதிகளில் சென்னையில் நடந்த சுதந்திரக் கட்சிப் பேரவைக் கூட்டத்தில் இத்தகைய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

(இ) குறிப்பான நடவடிக்கை எதுவும் தேவையில்லையெனக் கருதப்படுகிறது. நிலைமையை அரசாங்கம் நன்கு அறிந்து அது பற்றிக் கூர்ந்து நோக்கி வருகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே நக்சல்பாரி கம்யூனிஸ்டுகள் தங்களுடைய கைவரிசையைக் காட்டியிருக்கிறார்கள் என்று பத்திரிகை செய்தி வந்துகொண்டிருக்கிறது. அவர்கள் விஷயத்தில் சர்க்கார் தக்க கண்காணிப்புடன் நடந்து கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தால், சர்க்கார் உறுதியோடு, கண்டிப்போடு, நடவடிக்கை எடுப்பார்கள் என்று உறுப்பினர்கள் திடமாக நம்பலாம்.

திரு. எம். எத்திராஜுலு : கம்யூனிஸ்டு சக்திகள் இந்த தமிழகத்தில் உருவாகி அவர்கள் செல்வாக்கு பரவவில்லை என்று இந்த அரசு நினைக்கிறதா ? அப்படியில்லை என்றால் கீழ்வெண்மணி சம்பவம், விவசாயிகள் தகராறு, மாவோவின் போஸ்டர்கள் ஒட்டப்படுவது இவைகளுக்கெல்லாம் என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்படுவது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கூறியது போல நக்சல்பாரி கம்யூனிஸ்டுகள் வேலையாக இருக்கும். அதற்கும் இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் சம்பந்தமில்லை என்று அவர்களே அறிவித்திருக்கிறார்கள்.

MR. CHAIRMAN : Questions 64 and 65 are postponed.

Diet charges in Government Hospitals

*68 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to lay a paper on the Table of the House specifying the rates of daily diet charges for the different wards towards the cost of the diet supplied to in-patients in Government Hospitals in the State?